**செய்தி வெளியீடு எண்:51** **நாள்:23.01.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 22.1.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒருங்கே தயாரிக்கப்பட்ட, இசை மற்றும் கவின் கலைகளின் வளர்ச்சி – ஒரு வரலாற்றுப் பார்வை (**Nurturing Music and Fine Arts – A Historical Perspective)** என்ற நூலினை வெளியிட்டார்கள்.

இந்நூல், தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்த நம் பண்டைய கலைகளான இசை, ஆடல், ஓவியம் மற்றும் சிற்பம் ஆகியவை குருகுலங்களில் போதிக்கப்பட்டு, பின்னர் படிப்படியாக பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் கற்பிக்கப்பட்டு, தற்போது ஒரு பல்கலைக்கழகமாக உயர்ந்து நிற்கும் வரலாற்றினையும், சாதனைகளையும் விளக்குகிறது. மேலும், இந்நூலில் வரலாற்று சிறப்பு வாய்ந்த எழும்பூர் அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகள், மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, தமிழ்நாடு எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் மற்றும் இப்பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள பிற கல்லூரிகள் / கலை நிறுவனங்களின் விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை தென்னிந்திய இசை தொடர்பான நூல்களை எழுதிய திரு.வே. ஸ்ரீராம் அவர்கள் ஆங்கிலத்திலும், அதன் தமிழாக்கத்தினை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பிரமீளா குருமூர்த்தி அவர்களும் எழுதியுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறை ஆணையர் திருமதி வ. கலையரசி, இ.ஆ.ப., தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பிரமீளா குருமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**